செ. வெ. எண் : 250

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகளின் கவனத்திற்கு :

கடந்த 11.11.2006 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்டு, தற்பொழுது தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வரும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்கு உதவித் தொகை பெறவேண்டுமெனில், ஒவ்வொரு நிதியாண்டின் துவகத்திலும் தாம் எந்தவொரு நிரந்தரப் பணியிலும் இல்லை என்பதற்கான "சுய உறுதி ஆவணத்தை" தாம் உதவித் தொகை ஒப்பளிப்பு பெறும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. இந்த சுய உறுதி ஆவணத்தின் மாதிரி படிவம் ஏற்கனவே பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து பயனாளிகளும் மேலே தெரிவிக்கப்பட்ட சுய உறுதி ஆவணத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் சென்று அளிக்கும் போது, தங்களது வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை மற்றும் வேலைவாய்ப்பு உதவித் தொகை பெறும் வங்கிக் கணக்குப் புத்தகத்தையும் கொண்டு செல்லுமாறும், வரும் 31.05.07க்குள் இது சம்பந்தமாக உடனடியாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சுய உறுதி ஆவணத்தை சமர்பிக்கத் தவறும் பயனாளிகளுக்கு உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட மாட்டாது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
சென்னை – 32

வெளியீடு : இயக்குநர், செ.ம.தொ. துறை, சென்னை – 9.